அடிப்படை உரிமைகள் பற்றிய நியாயாதிக்கமும் அதனைப் பிர யோகித்தலும்.

126. (1) மூன்றும் அல்லது நான்காம் அத்தியாயத்தால் வெளிப் படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதான ஏதேனும் அடிப்படை உரிமையானது அல்லது மொழி உரிமையானது ஆட்சித்துறை நட வடிக்கையால் அல்லது நிருவாக நடவடிக்கையால் மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றிய ஏதேனும் பிரச்சினையை விசாரணை செய்வதற்கும் தீர்மானிப்பதற்கும் உயர்நீதிமன்றம் தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) எவரேனும் ஆள், அத்தகைய ஆள் தொடர்பிலான ஏதேனும் அடிப்படை உரிமை அல்லது மொழியுரிமை ஆட்சித் துறை நடவடிக்கையால் அல்லது நிருவாக நடவடிக்கையால் மீறப் பட்டுள்ளதென அல்லது மீறப்படவுள்ளதெனச் சார்த்துமிடத்து, அத்தகைய மீறல் தொடர்பில் நிவாரணம் அல்லது பரிகாரம் வழங்குமாறு கோரி, அந்த நிகழ்ச்சித் தேதியிலிருந்து ஒரு மாதத் துக்குள் அப்போதைக்கு நடைமுறையிலிருக்கும் அத்தகைய நீதி மன்ற விதிகளுக்கிணங்க உயர்நீதிமன்றத்துக்கு முகவரியிட்டனுப்பிய எழுத்திலான மனுவொன்றின் மூலம், அவர் தாமாகவோ, அல்லது அவரது சார்பில் சட்டத்தரணியொருவர் மூலமாகவோ அத்தகைய நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம். தொடர்ந்து விசாரிக்கப்படுவதற்கான உயர் நீதிமன்றத்தின் அனுமதியை முத லில் கேட்டுப் பெற்ற பின்னரே அவ்விண்ணப்பம் மேற்கொண்டு செல்லப்படலாம் ; அத்தகைய அனுமதி இரண்டு பேர்களுக்குக் குறையாத நீதிபதிகளால் வழங்கப்படலாம் அல்லது மறுக்கப்பட லாம்.

(3) ஆட்கொணர் எழுத்தாணை, உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, ஆணையீட்டெழுத்தாணை, மேற்செல் என்னும் எழுத்தாணை, அல்லது யாதுரிமை எழுத்தாணை என்ற இயல்பினவான கட்டளைகளுக்கான விண்ணப்பமொன்றை மேன் முறையீட்டு நீதிமன்றமொன்றில் விசாரணைசெய்கின்றபோது, அத் தகைய விண்ணப்பத்திற்கான கட்சிக்காரர் ஒருவரால் III ஆம் அல்லது IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளன அல்லது உடனடியாக மீறப்படவுள்ளன என்பதற்கு முதற்றோற்ற வளவிலான சான்று உள்ளது என்று அத்தகைய நீதிமன்றத்துக் குத் தோன்றுகின்றவிடத்து, அத்தகைய நீதிமன்றம், உயர்நீதி மன்றத்தால் தீர்மானிக்கப்படுவதற்கென அத்தகைய விடயத்தை உடனடியாக ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(4) உயர்நீதிமன்றம், இவ்வுறுப்புரையின் (2) ஆம், (3) ஆம் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் மனு அல்லது ஆற்றுப் படுத்துகை தொடர்பில், அச்சந்தருப்பத்தில் நீதியானதும் ஒப்புர வானதும் என அது கருதக்கூடியவாறான அத்தகைய நிவார ணத்தை வழங்குவதற்கு அல்லது அத்தகைய பணிப்புகளை ஆக்கு வதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் ; அல்லது அதன் அபிப்பிராயப்படி அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமை எதுவும் மீறப்படாவிட்டால் அந்தக் கருமத்தை மேன்முறை யீட்டு நீதிமன்றத்துக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

(5) உயர்நீதிமன்றம், இவ்வுறுப்புரையின்கீழான ஏதேனும் மனுவை அல்லது ஆற்றுப்படுத்துகையை, அத்தகைய மனு